பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 01 செவ்வாய்க்கிழமை 15.03.2022 கதிர் 130

**இனிது ரகசியம் அல்ல!**

சஜித் பிரேமதாஸாவின் ஐக்கிய மக்கள் சக்தி ஆளும் தரப்புக்கு நல்ல பேதிதான் கொடுத்திருக்கின்றது போலும். கலங்கிப் போய் நிற்கின்றது பாதுகாப்புத் தரப்பு. தலைமையைப் பிய்த்துக் கொள்ளாத குறைதான் போங்கள்.

2

# அரசுக்கு எதிராக கொழும்பில் இன்று மாபெரும் போராட்டம்

## வடக்கு, கிழக்கு மக்களும் பங்கேற்பு



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் அரசுக்கு எதிராக கொழும்பில் இன்று மாபெரும் போராட்டம் இடம்பெறுகின்றது. இதில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மக்களும் பங்கேற்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

9



# வடக்கு – கிழக்கில் தமிழக முதலீடுகள்!

## மாநில நிதியமைச்சருடன் சுமந்திரன் பேச்சு

தமிழகத் தொழிலதிபர்கள், இலங்கையின் புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து வடக்கு – கிழக்கில் கூடுதலான முதலீடுகளைச் செய்யும் திட்டம் குறித்து தமிழகத்துக்கு விஜயம் செய்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுடன் நேற்று விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டார்.

2

## ஜனாதிபதி நாளை விசேட உரை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட உரை நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் பொருள்களின் விலைகளும் எகிறியுள்ளன.

9

## தொடரும் விமலின் கட்சியின் பதிலடி; மற்றுமொருவரும் நேற்று பதவி துறப்பு



தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரான நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வழங்கப்பட்ட பதவியை நேற்று இராஜிநாமா செய்துள்ளார்.

கொத்மலை பிரதேச அபிவிருத்திக்குழுவின் தலைவர் பதவியையே அவர் இவ்வாறு இராஜிநாமா செய்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின்

9

## பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் பஸ் சங்கங்களுக்கிடையே மோதல்

பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் பஸ் சங்கங்களுக்கு இடையேகருத்துமுரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் திருப்தியடைவதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்தில்கொண்டு இந்தக் கட்டண அதிகரிப்பை ஏற்றுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அறிவிக்கப்பட்டுள்ள கட்டண அதிகரிப்பு போதுமானது அல்ல என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், உரிமையாளர்களுடன் கலந்துரையாடி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார் அவர்.

## குறைந்த விலை ரூ. 20 கூடிய விலை ரூ. 1,498

### புதிய பஸ் கட்டண விவரம் வெளியீடு

நாட்டில் எரிபொருள் விலை அதிகரித்துள்ள நிலையில் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்குத் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் அனுமதியும் கிடைத்துள்ளது. புதிய கட்டணப்பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 17 ரூபாவாக இருந்துவந்த ஆரம்பக்கட்டணம் 20 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 870 ரூபாவாக இருந்த பஸ் கட்டணம் ஆயிரம் ரூபாவாக

2

## இருப்பைத் தக்கவைக்கும் அரசின் முயற்சி தோல்வி

### கம்மன்பில பகீர் தகவல்



தேசிய அரசமைப்பது தொடர்பில் விடுக்கப்பட்ட அழைப்பை ரணில் விக்கிரமசிங்க நிராகரித்து விட்டார். எனவே, அரசின் முயற்சி தற்போது தோல்வியில் முடிவடைந்துள்ளது.

– இவ்வாறு புதிய ஹெல உறுமய கட்சியின் தலைவரான உதய

2

## எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலையை 850 ரூபாவால் அதிகரிக்குமாறு கோரிக்கை

லிட்டோ நிறுவனமானது சாதாரண உணவகங்கள் மற்றும் வீடுகளில் பயன்படுத்தப்படும் 12.5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலையை 850 ரூபாவால் அதிகரிக்குமாறு அரசைக் கோரியுள்ளது.

கடன் கடிதத்தைப் பெறுவது, கப்பல் கட்டணம் மற்றும் டொலர் பெறுமதி உள்ளிட்ட தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகளை கருத்தில் கொண்டு இந்தக் கோரிக்கையை லிட்டோ நிறுவனம் அரசிடம்

2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி உண்டு. Keep cards close to the chest என்பார்கள். விளையாடும் சீட்டுகளை நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்திருத்தல் என்று அதற்கு அர்த்தம். அதாவது உங்களிடம் இருக்கும் சீட்டை எதிர்த்தரப்பு அறிய முடியாத வகையில் வைத்து விளையாடுவது என்பது இதன் கருத்து.

அப்படி ஒரு நகர்வை முன்னெடுத்திருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

எக்கச்சக்கமாக பொருள்கள் விலை உயர்ந்தமை, எரிவாயுத் தட்டுப்பாடு, மின்வெட்டு, பணவீக்கம் என்று பல்வேறு பிரச்சினைகளினால் ஆடிப்போயிருக்கின்றது நாடு. ஆளும் தரப்புக்கு எதிராக மக்கள் சீற்றம் குமுறி எழும் கட்டம்.

இந்தச் சமயம் பார்த்து அரசுக்கு எதிரானமக்கள்கிளர்ச்சியைவெளிப்படுத்தும் விதத்தில் இன்று தலைநகரில் ஜனசமுத்திரத்தைத் திரட்டுகின்றது அக்கட்சி.

ஆனால், இந்தப் போராட்டத்தை அக்கட்சி எங்கு நடத்தப்போகின்றது, எங்கு மக்களை ஒன்று திரட்டப்போகின்றது என்பதை வெளிப்படுத்தாமல் – தனது சீட்டுக்களை வெளியே தெரிய அனுமதிக்காமல் நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்து விளையாடுவது போல – காய் நகர்த்துகின்றது ஐக்கிய மக்கள் சக்தி.

காலி முகத்திடலிலா? பாதுகாப்பு அமைச்சு – ஜனாதிபதி செயலகம் போன்றவற்றுக்கு முன்பாகவா? அலரி மாளிகைக்குப் பக்கத்திலா? அல்லது ஜனாதிபதியின் மிரிஹான இல்லத்துக்கு அருகிலா? அல்லது பிரதமரின் விஜேராம மாவத்தை வீட்டு முன்றிலிலா? அல்லது ஜெயவர்த்தனபுரவில் நாடாளுமன்றுக்குப் பக்கத்திலா? அல்லது புறக்கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாகவா? அல்லது மத்திய வங்கி அலலது நிதி அமைச்சு அலுவலகத்தை மறித்தா?

எங்கு என்று தெரியாது அல்லாடுகின்றது பாதுகாப்புத் தரப்பு. இடம் தெரிந்தால் அதை வைத்து குறைந்தபட்சம் ஒரு நீதிமன்றத் தடை உத்தரவையாவது பெறலம் என்றால் அதற்கும் அக்கட்சி இடமளிப்பதாகவில்லை.

அரசின் மீது சீற்றத்தில் இருக்கும் மக்களை இன்று கொழும்பில் ஒன்று கூடுமாறு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. அரசின் மீது கடும் சீற்றத்தில் இருக்கும் மக்கள் தம்பாட்டிலேயே கொழும்பில் பல்லாயிரக் கணக்கில் திரள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சில சமயங்களில் அந்த எண்ணிக்கை லட்சங்களைத் தாண்டக் கூடும்.

இவ்வளவு பேரை ஒரே சமயத்தில் எதிர்கொள்வதாயின் பொலிஸ் தடுப்புகள், தண்ணீர் பீய்ச்சியடிக்கும் வாகனங்கள், கண்ணீர்ப் புகைக் குண்டு வீசக் கூடிய படைத் தரப்பினர் மற்றும் பல்லாயிரம் பொலிஸார், படையினர் என்று ஆளணி, அம்பு தேவை.

இவ்வளவு தளபாடங்களையும் ஆளணியினரையும் கொழும்பில் எங்கு ஒன்று திரட்டுவது, எங்கு நிறுத்துவது என்று படைத் தரப்புக்கு பெரும் சிக்கல்.

கொழும்பில் மக்களை ஆங்காங்கே ஒன்று திரட்டி விட்டு, கடைசி நேரத்தில் போராட்டக் களத்துக்கு அவர்களை ஒன்று கூட்டுவதான் எதிரணியின் திட்டம் போலும்.

எடுத்ததற்கெல்லாம் நீதிமன்றத்திடம் ஓடிதடைஉத்தரவுவாங்கும்பொலிஸாரை இப்படி நாலாபுறமும் அலைய விடும் விதத்தில் கையாள்வதுதான் சரியாக இருக்கும்.

ஒரு பக்கம் திரும்புவது போல 'சிக்னல்' போட்டு விட்டு, எதிர்ப்புறம் திரும்பும் தந்திரம் போல காலையில் ஓரிடம் என்று அறிவித்து, பிற்பகலில் இன்னொரு இடத்துக்கு போராட்டத்தை நகர்த்தி, பாதுகாப்புத் தரப்புக்கு உச்சுக் காட்டும் விளையாட்டுக் கூட நடக்கலாம்.

ஜனாதிபதி கோட்டாபயவின் ஆளும் பக்கத்தில் ஆரவாரம் காட்டும் சில தரப்புகள் கடந்த இரு வாரங்களாக அதிக சத்தம் காட்டாமல் – அமைதி காப்பது குறித்தும் சில வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கோட்டாவின் பின்புலத்தில் அரசியல் செய்ய முயன்ற முன்னாள் – இந்நாள் சீருடைத் தரப்புகள் யாவும் கூட இப்போது அமுக்கித்தான் வாசிக்கின்றன.

மக்கள் செல்வாக்கு குறைந்து செல்லுவது வெளிப்படையானால், செத்த நாயிலிருந்து உண்ணி கழருவது போல இந்த ஒட்டுண்ணிகள் மெல்லக் கழன்று விடும்.

★ ★ ★

கொழும்பு வெள்ளவத்தையில் பாண் கியூவில் எனக்கு முன்னாள் இரு அன்பர்கள் நின்றிருந்தனர். ஒருவர் சிங்களவர். மற்றவர் தமிழர். படித்த மரியாதைக்குரிய நபர்கள் போல தோன்றினர். அவர்களின் உரையாடல் தற்போதைய நிலைவரம் பற்றியதாக இருந்தது. ஆங்கிலத்தில் நடந்த உரையாடலை நான் கிரகித்தேன்.

"பாவம் மக்கள்" – என்றார் சிங்கள அன்பர்.

"69 லட்சம் பேர் திரண்டு வாக்களித்தீர்களே...! அதற்கான பலனை இன்னும் இரண்டரை வருடங்கள் நீங்கள் அனுபவிக்கத்தான் வேண்டும். அது இன்னும் மோசமாக இருக்கும்" – என்று 'பஞ்ச்' வைத்தார் தமிழர். சிங்கள அன்பருக்கு அது புரியவில்லை.

"ஐயையோ... இன்னும் இரண்டரை வருடங்களா? எங்களால் தாங்க முடியாது. ஆனால் நான் அந்த 69 லட்சத்தில் அடங்கவில்லை. நான் அன்றும் இன்றும் ரணிலுக்குத்தான் வாக்களித்தேன்" – என்று பதிலளித்தார் சிங்கள அன்பர்.

விடயத்தைப் புரிந்து கொண்டார் தமிழ் அன்பர். யதார்த்தத்தை பேச முற்பட்டார்.

"நீங்கள் ராஜபக்ஷக்களுக்கு 2019 வாக்களித்தமைக்காக இன்னும் இரண்டரை வருடங்களுக்கு அனுபவிக்க வேண்டும். நாங்கள் 2005இல் ரணிலுக்கு வாக்களிக்கத்தவறியமைக்காக இன்னும் எவ்வளவு காலத்துக்கு அனுபவிக்க வேண்டுமோ தெரியவில்லை." – என்று கூறி விட்டு தமிழ் அன்பர் பாண் வாங்கிக் கொண்டு புறப்பட்டார்.

அடுத்து சிங்கள அன்பர். அதையடுத்து நான் பாண் வாங்கினேன். நான் பாண் வாங்கிக் கொண்டு வெளியே வரும் வரை அந்த சிங்கள அன்பர் காத்திருந்தார்.

சற்றுத் தொலைவில் போய்க் கொண்டிருந்த அந்தத் தமிழ் அன்பரை சுட்டிக் காட்டி "படித்த மனிதன், படித்த மனிதன் தான்" – என்றார் அந்தச் சிங்கள அன்பர்.

அதுவல்ல விடயம். அதற்கு அப்புறம் அவர் கூறியவைதான் கவனின் வேண்டியவை.

எங்கள் பக்கத்திலும் படித்தவர்கள் சிலர் படித்தவர்கள், புத்திஜீவிகள் என்று கூறிக்கொண்டு 'வியத்மக', 'எளிய' என்றெல்லாம் அமைப்புகள் நிறுவி, பீற்றித் திரிந்தார்களே. அந்த படித்த முட்டாள்களைக் கண்டு சில கேள்விகளை நான் அவர்களிடம் கேட்க வேண்டும்." – என்று என்னிடம் முணுமுணுத்தார்.

நான் சிரித்து விட்டுப் பதில் ஏதும் கூறாமல் வந்து விட்டேன். அடுத்த தடவை வெள்ளவத்தை காலி வீதிப் பகுதியில் எங்காவது அவரைக் கண்டால், வாயைக் கொடுத்து சீண்டிப் பார்க்க வேண்டும் என்று என் மனதுக்குள் இப்போது தோன்றுகின்றது.

இதுதான் இன்று தெற்கின் மன நிலை...!

– மின்னல் –

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழகத் தலைமைச் செயலகத்தில் நேற்று இரண்டு கட்டமாக இந்தப் பேச்சு நடைபெற்றது. பேச்சுக்களின் இடைநடுவில், அது தொடர்பில் தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சென்று சந்தித்து, சில விடயங்களைக் கலந்தாலோசித்த பின்னர் கலந்துரையாடலைத் தொடர்ந்தார் எனவும் அறிய வந்தது.

இந்தப் பேச்சுகளில் உலகத் தமிழர் பேரவையின் இயக்குநர் பவகுகனும் பங்கு பற்றினார்.

இலங்கைக்கு இந்தியா வழங்கும் உதவித் திட்டத்தின் கீழ் வடக்கு – கிழக்கில் இந்திய முதலீடுகளை அதிகரிப்பது குறித்தும் விவரிக்கப்பட்டிருப்பதும் –

இது குறித்து இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடன் கலந்துரையாடி வருவதும் – தெரிந்தவையே.

தமிழகத்துக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இலங்கையின் வடக்கு – கிழக்கில் தமிழக முதலீட்டாளர்களின் பங்களிப்பை ஊக்குவிக்க வேண்டியமை குறித்து தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜனையும் சந்தித்து விளக்களமளித்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாகவே தமிழக நிதி அமைச்சரை சுமந்திரனும் பவகுகனும் நேற்று தமிழகத் தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இந்திய மத்திய அரசின் ஊடாக தமிழக முதலீட்டாளர்களை இலங்கையின் வடக்கு – கிழக்கில் ஊக்குவிக்கும் செயற்பாடுகள் குறித்து உத்தியோகப்பற்றற்ற பூர்வாங்க பேச்சுகளில் சுமந்திரன் ஈடுபட்டார் என அறிய வந்தது.

இந்த முதலீடுகளில் பரஸ்பர ஊக்குவிப்பைச் செய்வதற்காக தமிழக முதலீட்டாளர்களுடன் தேவையானால் புலம்பெயர் தமிழர்களையும் கூட்டிணைப்பது குறித்தும் இரு சாராரும் பூர்வாங்கப் பேச்சுகளில் ஈடுபட்டனர் என்றும் –

இந்திய மத்திய அரசு ஊடாக கொழும்புடன் கூட்டிணைந்து செயற்பட்டு இந்த விடயத்தை முன் நகர்த்துவது குறித்து தீர்மானங்கள் எட்டப்பட்டன என்றும் – கூறப்பட்டது.

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது பற்றிய விடயமும் பேசப்பட்டது.

தமிழ் நாடு மாநிலத்துக்கு நியாய பூர்வமான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும், மாநில சுயாட்சியை அர்த்தமுள்ளதாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு விரைவில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் விரிவான கடிதம் ஒன்றை வரைய இருக்கின்றார் என்றும் –

அக்கடிதத்தில் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும் அதிக சுயாட்சி அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதையும் தமிழக முதல்வர் வலியுறுத்திக் குறிப்பிடுவார் என்றும் –

தமிழக முதல்வரின் அச்செய்தியை தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நேற்று சுமந்திரனிடம் தெரியப்படுத்தினார் என்றும் – அறிய வந்தது.

## எரிவாயு சிலிண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முன்வைத்துள்ளது என அறியமுடிகின்றது.

கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக சந்தைக்கு எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்காத லிட்டோ நிறுவனம், கடன் கடிதம் வழங்கப்பட்ட பின்னர் கப்பலில் இருந்து எரிவாயுவை இறக்குமதி செய்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 48 மணி நேரத்தில் 2 இலட்சம் எரிவாயு சிலிண்டர்களைச் சந்தைக்கு விநியோகித்ததுள்ளது.

இந்நிலையிலேயே விலை அதிகரிப்புக்கான கோரிக்கையை அந்த நிறுவனம் முன்வைத்துள்ளது.

---

## இருப்பைத் தக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசில் எந்தவொரு பதவியையும் ஏற்கப்போவதில்லை என ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

தனக்கான பெரும்பான்மைப் பலம் இல்லாமல் போய்விடும் என்பதால் எதிரணி உறுப்பினர்களை வளைத்துப் போடவே தேசிய அரசமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. எனினும், தனது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. அரசில் இணைய எதிரணிகள் மறுப்புத் தெரிவித்துள்ளன – என்றார்.

---

## குறைந்த விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகக் கூடுதலான பஸ் கட்டணமாக ஆயிரத்து 498 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஓட்டோ மற்றும் பாடசாலை வான் சேவை ஆகியவற்றின் கட்டணங்களும் அதிகரித்துள்ளன.




சிறுநீரகம் தேவை

31 வயது இளைஞர் ஒருவருக்கு
ஓ பொசிட்டிவ் ($O^+$) ரக சிறுநீரகம்
ஒன்று தேவை.
வழங்க முன்வருபவர்கள்

076 237 6603

என்னும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.

காலைக்கதிர் Kalaikkathir

# சபரிமலை

# ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.

No. 315, Kandy Road, Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# முற்பகல் செய்யின்...!

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பது வள்ளுவன் வாய்மொழி. பழமொழி நானூற்றின் ஆசிரியர் மூன்றுறையரையனாரும் அதையே கூறி நின்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் அக்கட்சி தலைமையிலான ஆளும் கூட்டணியில் இரண்டாவது பெரிய பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான இழுபறிகள் போகின்ற போக்கைப் பார்க்கும் போது இந்த வள்ளுவன் வாய்மொழிதான் நினைவுக்கு வருகின்றது.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன இருந்த போது, சுதந்திரக் கட்சியின் தலைவரான அவரின் கீழ் சாதாரண எம்.பிக்களானார்கள் ராஜபக்ஷ தரப்பினர். சுதந்திரக் கட்சியில் இருந்தபடியே தமது பினாமிகளான பஸில் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்றோர் மூலம் பொதுஜன பெரமுன கட்சியைத் தோற்றுவித்தனர்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவியை இழக்கும் வரை, அவருடன் – அவரது – சு.கவில் இருப்பது போலக் காட்டிக் கொண்டு, தங்களது சொந்தக் கட்சியை சத்தம் சந்தடியின்றி வளர்த்தனர் ராஜபக்ஷக்கள்.

2015 பொதுத் தேர்தலின் பின்னர் மொத்தம் 96 உறுப்பினர்களுடன் நாடாளுமன்றுக்குச் சென்ற சுதந்திரக் கட்சி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் முடியும் போது வெறும் 18 உறுப்பினர்களுடன் மிஞ்சியது. மற்றவர்கள் எல்லோரையும் உறிஞ்சி எடுத்திருந்தது பொதுஜன பெரமுன.

அப்படி சுதந்திரக் கட்சியை சுருட்டியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையையோ, பிற கட்டுப்பாட்டு செயற்பாடுகளையோ எடுக்க முடியாமல் பார்த்திருக்க வேண்டியவரானார் கட்சித் தலைவரும் அப்போதைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன. அவரின் கண்ணுக்கு முன்னாலேயே கட்சி கரைந்து போனது.

அது முற்பகலில் நடந்தது. அதற்குப் பதிலாக இப்போது பிற்பகலில் விளைவது என்ன?

அதே பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதியின் கீழ், அவரது கட்சி அரசின் கூட்டணியில் இருந்து கொண்டு, முன்பு ராஜபக்ஷக்கள் செய்தவற்றை இப்போது மைத்திரிபால சிறிசேன தரப்பினர் செய்து கொண்டிருக்கின்றனர்.

நாடாளுமன்றத்தில் 96 எம்.பிக்களுடன் இருந்த சு.கவை உறிஞ்சி எடுத்து 18 எம்.பிக்களுடன் விட்டுச் சென்றனர் ராஜபக்ஷக்கள்.

இப்போது ராஜபக்ஷகளின் அணியில் வெறும் 14 எம்.பிக்களாகக் கூட்டுச் சேர்ந்து நாடாளுமன்றம் சென்ற சு.க.தன் கைவரிசையைக் காட்டுகின்றது.

பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் யாரையும் சு.க. இப்போது தன்வசம் இழுக்கவில்லை. ஆனால் பொதுஜன பெரமுனவிலும், அதன் அரசிலும், அதன் ஜனாதிபதியிலும் அதிருப்தி கொண்ட மக்களின் கருத்தியல் – செல்வாக்கு – மாற்று சக்தியான சு.க. பக்கம் திரும்புவது கண்கூடு.

கடந்த பொதுத் தேர்தலில், அதுவரை காலமும் சு.க. பக்கம் இருந்த வாக்குகளில் மிகப் பெரும்பான்மையை பொதுஜன பெரமுன கட்சி – மொட்டுக் கட்சி – சூறையாடியிருந்தது. அதைத் திரும்பவும் தன் பக்கம் இழுப்பதில் சு.க. கணிசமான வெற்றி கண்டு வருகின்றது என்பதுதான் தெற்கு அவதானிகளின் தகவல்.

பொதுஜன பெரமுனவின் செல்வாக்குச் சரிவு சு.கவை மீண்டும் தூக்கி நிறுத்தும் என்பதுதான் தற்போதைய அரசியல் நிலைமையாகும்.

# கடற்கரைகளில் ஒதுங்குகின்ற மருத்துவ கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்குக!

## இரா.சாணக்கியன் வலியுறுத்து



கடற்கரைகளில் ஒதுங்கும் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கோப் குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையான டைனமைட் மீன்பிடி முறை காரணமாக கடல் வளம் பாதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், கடற்கரைகளில் ஒதுங்கும் மருத்துவக் கழிவுகள் உள்ளடங்களான கழிவுகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் எனவும் இரா. சாணக்கியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கான உபகரணம் தற்போது காத்தான்குடி நகர சபையில் மாத்திரமே காணப்படுகின்றது. எனவே இதனை வடக்கு கிழக்கிலுள்ள பிரதேச சபைகளுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும், இல்மனைட் அகழ்விற்கான அனுமதியை கடல்சார் திணைக்களங்களிடமும் பெற்றுக்கொள்வது அவசியம் எனவும் இரா.சாணக்கியன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# உத்தியோகபூர்வ இல்லம், வாகனங்களை கையளித்தார் வாசுதேவ நாணயக்கார!

நீர் வழுங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தனது உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் வாகனங்களை அமைச்சின் செயலாளரிடம் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) கையளித்தார்.

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை பதவி நீக்கம் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சர் முன்னதாக அமைச்சுப் பணிகளைப் புறக்கணித்தார். எனினும், அமைச்சர் பதவியை இரா ஜினாமா செய்யப் போவதில்லை என அவர் தெரிவித்திருந்த நிலையில் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் வாகனங்களை கையளித்துள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்த 12 மனுக்கள் விசாரணையை ஆரம்பித்தது உயர் நீதிமன்று!

கொழும்பு, மார்ச் 15

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் இருந்தும் அதிகாரிகள் அதனைத் தடுக்கத் தவறியமையால், தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது எனத் தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட 12 மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த ஜயவர்தன, புவனேக அலுவிஹாரரே, முர்து பெர்னாண்டோ, எல்.டி.பி தெஹிதெனிய, எஸ். துரைராஜா, மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என கோரி மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

# களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை முன்பாக தாதியர்கள் ஆர்ப்பாட்டம்!



களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை முன்பாக கடந்த (திங்கட்கிழமை) நண்பகல் 12 மணியிலிருந்து ஒரு மணிவரையில் தாதியர்கள் பதாகைகளை ஏந்தியவாறு பல்வேறு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய அமைச்சரவைப் பத்திரத்தை வழங்கு, திருத்தியமைத்த சம்பள முறைமையை தாதிய பட்டதாரிகளுக்கு வழங்கு, சம்பள முரட்பாட்டை நீக்கு, சுகாதார நிர்வாக சேவையில் தொழில் வல்லுநர்களை உள்ளடக்கு, விசேட கடமைக் கொடுப்பனவை 10,000 ரூபாயாக வழங்கு, பதவி உயர்வுகளை தாமதமின்ற வழங்கு உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை இதன்போது தாதியர்கள் ஏந்தியிருந்தனர்.

சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய், மேலதிகநேர கொடுப்பனவை 1/80 ஆல் வழங்கு, சுகாதார நிர்வாக சேவையை உருவாக்கு, 3,000 ரூபாவில் இலிருந்து 10,000 ரூபா வரை அதிகாரி, பட்டதாரி தாதியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கு, பதவி உயர்வுகளை 2010.11.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்து. உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே தாதியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் தாதியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

# கேள்வி அறிவித்தல்
# பருத்தித்துறை நகரசபை

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப் பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. தேசிய போட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30ஆந் திகதிய 04/2016(i) இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின்படி வடமாகாண எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட பெறுகைதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

3. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடி கட்டட/வீதிப்புனரமைப்புக்கு பொருத்தமான தரங்களில் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

4. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம்:- 021-226-3213) மேலதிக தகவல்களையும், பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

6. பெறுகைப் பத்திரம் வழங்கப்படும் திகதி 2022.03.15 ஆம் திகதி தொடக்கம் 2022.03.28 ஆம் திகதி பி.ப.2.00 மணிவரை அலுவலக நாள்களில் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 2,000/= இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு 2022.03.29 ஆந் திகதி பி.ப 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ சேர்ப்பிக்க வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகை நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் பெறுகைதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெறுகை திறக்கப்படும்.

8. பெறுகையானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து அறுபத்து மூன்று (63) நாள்கள் (2022.05.31) வரையும் செல்லுபடியாகும்.

9. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 2022.03.21 ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும். சொந்த செலவில் பங்குபற்றலாம்.

10. பெறுகை தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் பெறுகைக்குழுவின் தலைவருக்கே உண்டு.

11. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலா) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் | வேண்டப் படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு ரூபா | செல்லு படியாகும் காலம் |
| 1 | கல்லூரி வீதி 13ஆம் ஒழுங்கை, தட்டாதெரு மிகுதிவேலை, மணல்ஒழுங்கை 1ஆம் ஒழுங்கை. | 2.045Mn | 60 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 | C9/C8 | 20500 | 28.06.2022 |
| 2 | வக்கமோடை பக்க வடிகான், 2ம் குறுக்குத்தெரு பக்கவடிகான், சின்னத்தோட்டம் வீதி பக்கவடிகான் | 3.061Mn | 60 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021, சபை நிதி 2022 | C9/C8 | 31000 | 28.06.2022 |
| 3 | துரைதோட்டம் வீதி | 1.364Mn | 60 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 | C9/C8 | 14000 | 28.06.2022 |
| 4 | வோல்டன் பிளேஸ் 4 ஆம் ஒழுங்கை, நெல்லண்டை கிழக்கு வீதி 4 ம், 1 ஆம் ஒழுங்கைகள் | 1.896Mn | 60 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021, சபை நிதி 2022 | C9/C8 | 19000 | 28.06.2022 |
| 5 | கடற்கரை வீதி 19 ஆம் ஒழுங்கை | 1.543Mn | 60 நாட்கள் | சபை நிதி 2022 | C9/C8 | 15500 | 28.06.2022 |
| 6 | பண்டாரி அம்மன் கோவில் பின் வீதி | 0.645Mn | 60 நாட்கள் | சபை நிதி 2022 | C9/C8 | 6500 | 28.06.2022 |
| 7 | உதயசூரியன் 2ஆம், 4 ஆம் ஒழுங்கைகள் | 1.501Mn | 60 நாட்கள் | சபை நிதி 2022 | C9/C8 | 15000 | 28.06.2022 |
| 8 | தலைமை அலுவலக கூரை திருத்தம் | 4.785Mn | 90 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2018 | C8/C7 | 48000 | 28.06.2022 |

**திரு.யோ.இருதயராஜா**
**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை.**
**2022.03.15**

# தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்கள - முஸ்லிம் மக்கள் உணர்கிறார்கள்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. விளக்கம்








சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை உணரத் தொடங்கி விட்டார்கள். இதனால் நாம் எமது பிரச்சினைகளையும், பாதிப்புக்களையும், கோரிக்கைகளையும் சிங்கள – முஸ்லிம் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் தெரியப்படுத்தி இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகக் கையாள வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான பேரணிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது அன்றாட வாழ்க்கையில் இருக்கின்ற சுமைகளைப் பற்றி யோகின்ற போது வவுனியா மாவட்டத்தின் எல்லா இடங்களிலும் இருந்து மக்கள் வருகை தந்தமை ஓர் ஆறுதலையையும், நம்பிக்கையையும் கொடுத்திருக்கிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் எமது குடும்பங்களுக்கு அடுத்த நேர சாப்பாட்டைப் போடுவதே ஒரு சவாலான காலகட்டம். விலை அதிகரிக்கின்ற ஒரு காலகட்டம். அனைத்து விடயங்களிலும் சுமைகள் கையை மீறித் தலைக்கு மேல் அமத்திக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் நாங்கள் இந்த விழிப்புணர்வு பேரெழுச்சியை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்கள் கடந்த 34 வருடங்களுக்கும் மேலாக ஆயுதம் ஏந்திப் போராடிய காலத்தில் அந்த விடுதலைப் போராட்டம் தற்போதை நிலையை விட மோசமான வகையில் எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டது. இன்று ஒரு லீற்றர் பெற்றோல் விலை அதிகரித்து விட்டதாக இந்தத் தீவில் உள்ள சிங்கள மக்கள் கொந்தளிக்கிறார்கள். சாப்பாட்டு விலை கூடி விட்டதாகக் கொந்தளிக்கிறார்கள். ஆனால் அந்த மக்கள் பாவம். அவர்களுக்கு இருக்கக் கூடிய நிலையில் அது மிகப்பெரிய சுமை. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை உரிமைக்காகப் போராடிய ஒரே ஒரு காரணத்துக்காக எங்களது தாயக நிலப்பரப்பில் பொருளாதாரத் தடைகளை விதித்து தசாப்தங்களாக எங்களது மக்களது வாழ்க்கையை நசித்தார்கள். இன்று தெற்கில் கொந்தளிக்கும் மக்கள் 20 வருடங்களுக்கு முதல் அதாவது 2001 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு லீற்றர் பெற்றோல் 1500, 2000 ரூபா ஆக இருந்த ஒரு காலத்தில் இருந்து தான் எங்களுடைய மக்கள் இந்தச் சுமைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் மீது செலுத்திய கொடுமைகள் நூற்றில் ஒரு பங்காவது இன்று சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ளமை அவர்களது கண்களைத் திறக்க வைத்துள்ள ஒரு காலகட்டம். தங்களது தலைவர்கள் தங்களை ஏமாற்றி விட்டார்கள் என்ற நிலைக்கு வந்துள்ளார்கள். தங்களது தலைவர்கள் தொடர்ச்சியாகப் பொய் சொல்லி வந்துள்ளார்கள் என்றும், எவரையுமே நம்ப முடியாது என்று சொல்லுகின்ற ஒரு காலகட்டத்துக்கு வந்துள்ளார்கள். இந்த நிலை தொடருமாக இருந்தால் அந்த மக்கள் முழுமையாக வீதிக்கு இறங்குகின்ற ஒரு நிலை விரைவிலே வரும். தங்களுடைய தலைவர்களைப் பார்த்து அவர்களை நம்ப முடியாது என்று கூறுகின்ற இந்தக் கால கட்டம் ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில் சர்வதேசமும் கடந்த 74 வருடங்களாகத் தமிழ் மக்களைப் புறக்கணித்து, தமிழ் மக்களது உரிமைகளை முற்று முழுதாக உதாசீனம் செய்து இருக்கின்ற ஸ்ரீலங்கா அரசுக்கும் ,சர்வதேச ரீதியாக கோரிக்கைகளை விடுத்து வருகிறார்கள். ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூட குறைபாடுகள் இருந்தாலும் கூட சர்வதேச சமூகம் கூறும் விடயத்தைப் பார்க்க வேண்டும். இங்கு நல்லிணக்கம் ஏற்படுமாக இருந்தால் இத்தீவில் வாழும் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் எடுத்துள்ளார்கள். இங்கு பயங்கரவாத யுத்தம் நடந்ததாக அரசு கூறும் நிலையில் தமிழ் மக்களும், ஏனைய சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

தாம் வாக்களித்த தமது தலைவர்கள் ஏமாற்றி விட்டார்கள் என்று தமது சொந்தத் தலைவர்களையே சிங்கள மக்கள் பார்க்கின்ற போது தமிழ் மக்களைப் பற்றி இவர்கள் கடந்த 70 வருடங்களாகச் சொல்லியிருக்கின்ற விடயங்கள் கூட அப்பட்டமான பொய்கள் என்று கேள்வி எழுப்பக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலையில், முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களது போராட்டம் நியாயமானது என யோசிக்கின்ற இந்த நிலையும் உருவாகியுள்ளள போது 34 வருடங்களுக்கு முதலே நிராகரித்த ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஆவது திருத்தத்தை வலியுறுத்துவதா அல்லது நிரந்தரமாகத் தமிழ் மக்களுடைய தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற சுயநிர்ணயத்துடன் கூடிய சமஷ்டித் தீர்வை வலியுறுத்துவதா? இது பற்றி எமது மக்கள் சிந்திக்க வேண்டும்.

நாங்கள் பொறுப்புடன் கூறுகின்றோம். கடந்த காலங்களில் எங்களுக்கு ஒரு தலைமை இருந்தது. அவர்கள் தங்களது உயிர்களைத் தியாகம் செய்யத் தயாராக இருந்தார்கள். அப்டியெனில் நீங்கள் யோசிக்க வேண்டும். அவர்கள் தங்களது உயிர்களைத் தியாகம் செய்வதற்கும் தயார் என்றால் ஒரு பொய்க்காக அவர்கள் உயிரைத் தியாகம் செய்யவில்லை. அப்படிப்பட்டவர்கள் பின் கண்ணை மூடிக் கொண்டு போகலாம். ஆனால், இன்றைக்கு அப்படியான நிலை இல்லை. ஆனால் இன்று மக்கள் தங்களது உரிமைகளை அடைவதாக இருந்தால் முதல் விடயமாகத் தங்களை ஏமாற்றுபவர்களை அடையாளப்படுத்த வேண்டும். அப்படியாயின் நீங்கள் முதல் கட்டமாக விழிப்புணர்வு அடைய வேண்டும். இந்த அரசியலை விளங்கிக் கொள்ள வேண்டும். இனிமேல் யாரும் வந்து கூறுகின்ற சொற்களைக் கேட்டு அதற்கு பின்னால் செல்லும் காலம் முடிந்து விட்டது. அதனால் தான் நாங்கள் கிராமம் கிராமமாகச் சென்று சமகால அரசியலை உங்களுக்கு விளங்கப்படுத்தி வருகின்றோம்.

சிங்கள மக்களே தங்களது தலைவர்கள் தங்களை ஏமாற்றியுள்ளார்கள். தங்களது சுயநலத்துக்காகவும் தங்களது பொருளாதாரத்துக்காகவும், தங்களது குடும்பங்களைக் கருதியும் செயற்படுகிறார்கள். ஊழல் உச்சத்துக்குப் போயுள்ளது என முதல் தடவையாகத் தெற்கில் வாழும் சிங்கள மக்கள் தங்களது அனைத்து தலைவர்களையும் சந்தேகிக்கும் நிலை உருவாகியுள்ளது.

முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு விசுவாசமாக இருந்தும் கூட குறிப்பாகத் தமிழர்களது உரிமைப் போராட்டக் காலத்தில் முஸ்லிம் தலைவர்கள் சிங்களத் தலைவர்களுடன் இருந்தார்கள். அவர்கள் எங்களுடன் சேர்ந்து போராடவில்லை என்கின்ற குறை இருக்கின்றது. அப்படிப்பட்ட முஸ்லிம் மக்களையும் தங்களது எதிரிகளாகப் பார்த்து அவர்களுக்கு எதிராக அரச தரப்பினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதுவரைக்கும் ஸ்ரீலங்கா அரசையும், தேசத்தையும் நம்பி அடிவாங்கும் கட்டத்தில் முஸ்லிம் மக்கள் இருக்கிறார்கள். தற்போது அவர்களும் கேள்வி எழுப்பும் ஒரு நிலை காணப்படுகின்றது. தமிழர்கள் போராட்டம் நியாயமானது என்ற சிந்தனை முஸ்லிம் மக்கள் மத்தியில் விசேடமாக இளைஞர்கள் மத்தியில் வந்துள்ளது.

இந்த நிலையில் தமிழ் மக்கள், சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும், உலகத்துக்கும் உண்மைகளைச் சொல்ல வேண்டியுள்ளது. எங்களது பாதிப்பை உறுதிப்படுத்த என்ன தேவை. அதனை நாட்டை பிரிக்காமல் அடையலாம் என்றால் அற்கான அந்த உத்தரவாதத்தைக் கொடுத்து எமது இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்கு முயற்சி எடுக்கும் காலம் இது. தங்களது தலைவர்கள் தங்களை ஏமாற்றுகிறார்கள் என்றால் தமிழ் மக்கள் பற்றி எவ்வளவு பொய் சொல்லியிருப்பார்கள் என்று சிங்கள மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். அதனால் நாம் இன்று சிங்கள மக்களுக்கு இதனை தெரியப்படுத்தி எமக்கானத் தீர்வைப் பெற முயற்சிக்க வேண்டியிருப்பதுடன், பொருளாதாரம் சீரழிந்துள்ள நிலையில் புலம்பெயர் உறவுகளுடன் சேர்ந்து எமது பிரச்சினை தீர்க்கப்படும் போது உங்களது பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியும் என நாம் பேச வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இன்று இலங்கையை மையமாகக் கொண்டு பேரம் பேசும் முறை உருவாகியுள்ளது. சீனா, இந்தியா பூகோளப் போட்டியில் தமிழ் தலைவர்கள் இந்தியாவின் நலன் சார்ந்து அரசியலை முடக்க முயல்கிறார்கள்.

வவுனியா மாவட்டத்தில் இந்தப் பேரணி உங்களை ஏமாற்ற விரும்புவர்களுக்கு கண்களைத் திறக்க வைக்கின்ற ஒரு நிகழ்வு. இந்த நிகழ்வு வவுனியாவில் கூட வெறுமனே ஓர் ஆரம்பம். நாங்கள் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியிருக்கின்றோம். ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பேரில் எமது அரசியலை முடக்குவதற்கான சதி நடக்கின்றது என்பதை சிந்திக்க வைத்துள்ளோம். இனி ஒவ்வொரு வீடுகளுக்கும் செல்லப் போகின்றோம். இந்தப் பணி யாழ்ப்பாணத்தில் முதல் கட்டமாக நடந்தது. அந்த கிட்டுப் பூங்கா பிரகடனத்தின் அடிப்படையில் வவுனியாவில் நடத்தியுள்ளோம். அடுத்த கட்டமாக தென் தமிழ் தேசத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்த இருக்கின்றோம். அந்த வகையில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சென்று எங்களது மக்களுக்கு உண்மைகளைக் கூறுகின்ற பணி தொடரும்.

ஸ்ரீலங்கா அரசு ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசமைப்பைக் கொண்டு வரும் போது அதனை ஆதரிப்பதற்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேரில் 5 பேர் அரச ஆதரவுடன் இருக்கிறார்கள். அவர்கள் அரசு விரும்புவதைச் செய்கிறார்கள். அது போல் மிகுதி 13 பேரில் சமஷ்டியைக் கோரி ஒற்றையாட்சியை நிராகரித்தே வாக்கு கேட்டார்கள். அந்த 13 பேரும் தேர்தல் காலத்தில் 13 என்ற வார்த்தையே பேசமால் ஒற்றையாட்சியை நிராகரித்தே வாக்கு கேட்டார்கள். அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு உறுப்பினர்கள் தவிர, ஏனைய 11 பேரும் 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் காரணம் காட்டி ஒற்றையாட்சி அரசமைப்புக்கு ஆதரவு வழங்கவுள்ளார்கள். அவர்களது தலைவர்கள் தான் இந்தியாவிற்கு கடந்த ஜனவரி மாதம் 13 ஐ நடைமுறைப்படுத்தக் கோரி கடிதம் எழுதி ஒற்றையாட்சிக்கு விசுவாசம் காட்டியுள்ளார்கள். ஆகவே 11 பேரும் தாங்கள் நடைமுறைப்படுத்தக் கோரிய 13 ஆவது திருத்தம் இந்தியாவின் அழுத்தத்தால் புதிய அரசமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் காட்டி ஆதரவு வழங்கவுள்ளார்கள்.

ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசமைப்பை ஆதரிப்பதை முறியடிப்பதற்காகத் தான் நாங்கள் வீடு வீடாகச் சென்று எமது மக்களை விழிப்புணர்வூட்டி வருகின்றோம். அந்தவகையில் வவுனியாவில் நடைபெற்ற இந்தப் பேரணி என்னைப் பொறுத்தவரை மிகப் பெரும் வெற்றி. இந்தப் பேரணி எம்மை ஏமாற்றுபவர்களுக்கு ஒரு சவாலை விடுகின்ற ஒரு நிகழ்வு. நாடாளுமன்றத்தில் ஒற்றையாட்சிக்கு ஆதரவு கொடுத்தால் வவுனியாவிற்கு நீங்கள் திரும்ப முடியாது என்ற ஒரு செய்தியைக் கூறும் மாபெரும் நிகழ்வாக இந்தப் பேரணி அமைந்துள்ளது.

இலட்சக் கணக்கில் மக்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்தமை தங்களது உரிமைகளை அடைவதற்கும், தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் சுயநிர்ணயத்தை அனுபவிப்பதற்குமே. செய்த தியாகங்களை மதித்து தனிப்பட்ட ஒரு விடயமாகக் கருத்திப் போராடுவதற்கு எம்மோடு சேர்ந்து நீங்கள் வந்திருக்கின்றமை மிகப்பெரும் நம்பிக்கையையும் பலத்தையும் கொடுத்திருக்கிறது. இந்தப் புரட்சி தொடர வேண்டும். இந்த விழிப்புணர்வு ஒவ்வொரு தமிழனின் காதிலும் விழ வேண்டும். நாங்கள் ஒற்றுமையாக ஒரு தேசமாக நின்று எமது உரிமைகளைப் பெற உறுதி பூணுவோம். – எனத் தெரிவித்தார்.

# தமிழர்களின் அபிலாஷைகளை 13 இற்குள் முடக்கும் சதி முயற்சிகளை முறியடிப்போம்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியாவில் பேரெழுச்சி

"தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13 ஆம் திருத்தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிப்போம்'' தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை, வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வை வலியுறுத்துவோம்' என்னும் அடிப்படையில் தமிழ் மக்களினதும், வெகுசன அமைப்புக்களினதும் பங்குபற்றலுடன் 2022 தை 30 ஆம் திகதியன்று, யாழ்.நல்லூர் கிட்டு பூங்காவில் வெளியிடப்பட்ட பிரகடனத்தை மீளவும் உறுதிப்படுத்த, வவுனியா தாண்டிக்குளம் ஐயானார் விளையாட்டுக்கழக மைதானத்தில் 2022 பங்குனி 13 ஆம் திகதியாகிய ஞாயிற்றுக்கிழமை தமிழர்கள் நாம் பல்லாயிரமாய்த் திரண்டு நிற்கின்றோம்.

– இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட பேரணி தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

சிங்கள பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிவரும் தமிழ்த் தேசம் – தனது அடிப்படையான அரசியல் உரிமைகளான வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம் அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங்கள தேசத்துக்கும், இலங்கைத் தீவின் மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் இந்தத் தொடர் போராட்டம் வலியுறுத்திக் கூற விரும்புகின்றது.

சிங்கள பௌத்த பெரும்பான்மை மக்களின் ஏகோபித்த வாக்குகளால் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள இன்றைய அரசாங்கத்தால் இலங்கைக்கான நான்காவது அரசமைப்பு கொண்டுவரப்படவுள்ளது. அதை இந்த வருடத்துக்குள் நிறைவேற்றவுள்ளதாக இந்த அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டும் உள்ளது. அது இறுக்கமான ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாகவே அமையும் என்பதையும், அரசாங்கம் உறுதிபடக் கூறியுள்ளது.

இந்த அரசமைப்பை ஒரு தலைப்பட்சமாக நிறைவேற்றுவதற்குரிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் இந்த அரசாங்கம் கொண்டுள்ளது. இலங்கையில் கொண்டுவரப்பட்ட மூன்று அரசமைப்புக்களும் இதே போன்றதொரு சிங்கள பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டே நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பங்களிளெல்லாம் தமிழ்த் தலைமைகள் அந்த ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்களை எதிர்த்திருந்தமையுடன், வடக்கு கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம், அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தி வந்ததன் விளைவாகவே, தமிழர்களுக்கு இனப்பிரச்சினையொன்று உண்டு என்னும் விடயத்தைத் தக்கவைக்கக்கூடியதாக இருந்தது. குறிப்பாக, சிங்கள அரசு தமிழருடைய உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதமாக சித்திரித்து, இங்கு பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளதாகக் கூறி, போரை முடிவுக்குக் கொண்டு வந்து 13 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும், இன்றுவரை தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை தொடர்ந்தும் இருக்கிறது என்கின்ற நிலையை நாம் தக்கவைத்திருப்பதற்கான ஒரேயொரு காரணம், இந்த நாட்டின் பிரதான சட்டமாக இருக்கும் மூன்று அரசமைப்புக்களையும் தமிழ் மக்கள் நிராகரித்திருந்தமையேயாகும்.

இவ்வாறிருக்க, 1980 களில் இலங்கையை மையமாகக் கொண்டிருந்த அமெரிக்க – இந்திய பூகோளப் போட்டி காரணமாகவே இந்தியா தனது நலனை அடைவதற்காக தமிழர்களின் இனப்பிரச்சினையைக் கையிலெடுத்திருந்தது. 1987 இல் இலங்கை, இந்திய நலன் சார்ந்து செயற்படத் தயாரான நிலையில், இந்தியா தனது தேசிய பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்தி, சிங்களத் தரப்புடன் உடன்பட்ட பின்னர், எந்த ஒற்றையாட்சிக் கெதிராகத் தமிழ்த் தரப்பைப் பயன்படுத்தியதோ, அதே ஒற்றையாட்சிக்குள்ளான 13 ஆம் திருத்தத்தையே தமிழ்ர்களுக்கான தீர்வாக இலங்கை அரசு முன்வைத்திருந்த நிலையில், தமிழ்த் தரப்பை இந்தியா கைவிட்டிருந்தது.

இந்நிலையில் அப்போதிருந்த தமிழ்த் தரப்புகளாலும் ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டம் நிராகரிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நேர்மையான தலைமைத்துவத்தின் காரணமாக ஒற்றையாட்சிக்குள் முடக்கும் செயற்பாடுகள் அனைத்தும் தடுக்கப்பட்டிருந்தன. 2005 இன் பின்னர், இந்திய – சீனா பூகோளப்போட்டி மீண்டும் இலங்கையில் உருவாகியிருந்த பின்னணியிலேயே ஓர் இனப்படுகொலையூடாகப் போராட்டம் மௌனிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், இந்தியா மீண்டும் தனது ஆதிக்கத்திலுள்ள தமிழ்த் தரப்புக்களைப் பயன்படுத்தி, தமிழ் அரசியலை ஒரு துருப்புச் சீட்டாகக் கையாண்டு இலங்கை அரசோடு பேரம்பேசி வருகின்றது. இலங்கை, சீனாவின் விவகாரத்தில் இந்திய நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் செயற்படுமானால், இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ்த் தரப்புக்களைப் பயன்படுத்தி, தமிழரின் அரசியலை ஒற்றையாட்சிக்குள்ளான 13 ஆம் திருத்தத்திற்குள் முடக்குவதற்கும் இணங்கியுள்ளது.

இந்தப் பின்னணியிலேயே, இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ்த் தரப்புகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எவ்.) போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழ்த் தேசியக் கட்சி உள்ளிட்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் இணைந்து 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி கூட்டாக கையொப்பமிட்ட கடிதத்தை 18-01-2022 அன்று இந்தியத் தூதுவரிடம் கையளித்துள்ளனர்.

இதன்மூலம், 13ஆம் திருத்தச்சட்டத்திலுள்ள சரத்துக்கள் புதிய அரசமைப்பிலும் உள்வாங்கப்படும் பட்சத்தில், இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதிய ஒற்றையாட்சி அரசமைப்புக்கு ஆதரவு வழங்குவதனூடாக, தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற நிலைமையையே உருவாக்கி, நாட்டிலுள்ள அனைத்து இனங்களும் ஏற்றுக்கொண்ட ஓர் அரசமைப்பை உருவாக்கிவிட்டதாகவும், இனப்பிரச்சினை இதனூடாகத் தீர்க்கப்பட்டு விட்டதாகவும் உலகுக்குப் பறைசாற்றுவதற்குத் தயாராகிறார்கள்.

இந்த ஆபத்திலிருந்து தமிழ்த் தேசத்தை மீட்டெடுப்பதற்கு, தமிழ்த் தேச மக்கள் அணிதிரள்வதன் ஊடாகவே தடுத்து நிறுத்த முடியும் என்னும் யாதார்த்தத்தை விளங்கிக் கொண்டு, இந்தத் தொடர் போராட்டம் பின்வருவனவற்றைப் பிரகடனப்படுத்துகிறது.

தமிழ்த் தேச மக்கள் தொடர்ச்சியாக ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை 70 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வந்திருக்கின்ற நிலையிலே, 2009 இல் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பின்னரும், ஒற்றையாட்சியை நிராகரித்தும், தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்தைக் கோரியும் ஒவ்வொரு தேர்தல்களூடாகவும் தங்களது ஏகோபித்த ஆணையை வழங்கி வந்திருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசமும் – அதன் இறைமையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கப்படுகின்ற தீர்வுக்குப் பதிலாக – ஒற்றையாட்சிக்குள் இருக்கக்கூடிய ஒரு கட்டமைப்பாக (13 ஆம் திருத்தச் சட்டமாகவோ அல்லது வேறு வடிவத்திலோ) இருக்குமானால் அவ்வகையான செயல், தமிழ் மக்களுடைய ஆணைக்குத் துரோகம் இழைக்கும் வகையிலேயே அமையும் என்ற விடயத்தை இந்தப் போராட்டம் பிரகடனப்படுத்துகிறது.

தமிழ் மக்கள் – காலம் காலமாக வழங்கிவரும் தமிழ்த் தேச அங்கீகாரத்துக்குரிய ஆணையை மீறி, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆம் திருத்தத்தையோ அல்லது வேறு எந்தவொரு திருத்தத்தையோ வலியுறுத்துகின்ற தரப்புக்கள், அம்முயற்சியைக் கைவிட வேண்டுமென இந்தப் போராட்டமூடாக வலியுறுத்துகிறோம்.

இந்திய அரசு இலங்கையோடு நல்லுறவைப் பலப்படுத்திக்கொள்வதையோ அல்லது தனது பூகோள – அரசியல் நலன்களைப் பேணுவதையோ அல்லது தென் ஆசிய பிராந்திய வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதையோ ஈழத்தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. இந்தியாவை எமது நட்புசக்தியாகவே கருதுகின்றோம். இந்தியாவின் தேசிய நலன்களைப் பேணுவதில் எமக்கு மிகுந்த விருப்பமும் அக்கறையும் ஈடுபாடும் உள்ளன. ஆனால் தமிழ் மக்கள் தமது நட்பு சக்தியாகக் கருதும் இந்தியா, தனது பூகோள நலன்களைப் பூர்த்திசெய்வதற்காக தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்கி, தமிழ் மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணிக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறு கோருகின்றோம்.

தமிழ்மக்கள் 70 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தில், தமிழ்த் தேச அங்கீகாரத்தையும் – அதனுடைய தனித்துவமான இறைமையையும் – சுயநிர்ணய உரிமையையும் முழுமையாக அனுபவிக்கக் கூடிய 'சமஷ்டி' அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும்.

மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி நின்ற 2022 தை 30 ஆம் திகதிய கிட்டுப்பூங்கா பிரகடனத்தை வவுனியா தாண்டிக்குளம் ஐயானார் விளையாட்டுக்கழக மைதானத்தில் 2022 பங்குனி 13 ஆம் திகதியாகிய இன்று (அன்று), பல்லாயிரக் கணக்கில் திரண்டு நிற்கும் தமிழர்களாக, நாம் மீளவும் உறுதிப்படுத்துகின்றோம்.
– என்றுள்ளது.

## புலமைப்பரிசில் தோற்றிய மாணவர்களுக்கு செந்தில் தொண்டமான் வாழ்த்துச் செய்தி!

வெளியாகியுள்ள தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் பெரும்பாலான மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

மலையகத்தைச் சேர்ந்த பெரும்பாலான பாடசாலைகளில் சிறந்த பெறுபேற்றை மாணவர்கள் பெற்றுள்ளனர்.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ள மாணவர்களுக்கும், இப்பரீட்சையில் ஆர்வத்துடன் தோற்றிய மாணவர்களுக்கும் இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு முழுவதும் கொரோனா பெருந்தொற்றால் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தன. பெரும் நெருக்கடிக்கு மத்தியில்தான் மாணவர்கள் கல்வியைக் கற்றனர்.

அவர்களுக்கு கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்டிருந்த ஆசிரியர்களும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர்.

பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியும் மாணவர் சமூகம் இம்முறை சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளமைக்காக எனது பாராட்டை தெரிவிப்பதுடன், ஆசிரியர் சமூகத்துக்கும் வாழ்த் துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பரீட்சையில் தோற்றி வெற்றி பெறாத மாணவர்களுக்கு இது முடிவல்ல ஆரம்பம் எனவும், இனிமேல் எதிர்கொள்ளும் ஏனைய பரீட்சைகளை சிறப்பாக எதிர்கொள்ள வேண்டும் எனவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## 20 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கப்பல் நேற்று வந்தது

*20 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை ஏற்றிக் கொண்டு மற்றுமொரு கப்பல் நேற்று (திங்கட்கிழமை) இலங்கையை வந்தடைந்தது என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.*

*கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைவந்தடைந்த கப்பலில் இருந்த டீசல் தற்போது நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்படுவதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இருப்பினும் இந்தக்கப்பல் கடந்த சனிக்கிழமை இலங்கைக்கு வரும் என எதிர்பார்த்திருந்தபோதும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது தாமதமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கப்பலில் 38 ஆயிரத்து 300 மெற்றிரிக் தொன் டீசல் இருந்ததாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.*

# தேசிய அரசு என்பது சாத்தியப்படாத ஒன்று!

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



தற்போது குடும்ப ஆட்சி நடந்துக்கொண்டிருக்கும் இலங்கையில் தேசிய அரசு என்பது சாத்தியப்படாத விடயம். குடும்ப ஆதிக்கமே ஆட்சியில் கோலோச்சியுள்ளது. அதனால்தான் விமல், கம்மன்பில போன்றவர்கள் வெளியேறியுள்ளனர் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று ( திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாட்டில் ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து, டொலரின் பெறுமதி அதிகரித்துவருவதால் நாளாந்தம் பொருள்களின் விலை உயர்வடைகின்றது. இதனால் நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவருகின்றனர்.

எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு, போக்குவரத்துத்துறைகூட ஸ்தம்பித்துள்ள நிலை. அதுமட்டுமல்ல சமையல் எரிவாயு உள்ளிட்ட பொருள்களை வாங்க வரிசையில் காத்திருக்க வேண்டிய பேரவலம்வேறு,

எனினும், நாட்டை மீட்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்கு அரசு, நிபுணர்களின் ஆலோசனைகளை உள்வாங்கவில்லை. அது தொடர்பில் ஆட்சியாளர்கள் அலட்டிக்கொள்ளமாட்டார்கள். எனவே, இந்த அரசை விரட்டியடித்தால்தான் நாட்டு மக்களுக்கு விமோசனம் கிட்டும்.

தேசிய அரசமைக்குமாறு ரணில் விக்கிரமசிங்க கூறவில்லை. மாறாக தேசிய வேலைத்திட்டம் பற்றியே அவர் கருத்து வெளியிட்டுள்ளார். இந்த நாட்டில் குடும்ப ஆட்சியே நிலவுகின்றது. அங்கு பிறரின் கருத்துக்கு இடமில்லை. அதனால்தான் விமல், கம்மன்பில போன்றவர்கள் வெளியேறியுள்ளனர். குடும்ப ஆட்சி நடக்கும் சூழ்நிலையில் தேசிய அரசு சாத்தியப்படாது. குடும்பத்தின் திட்டங்களே அமுல்படுத்தப்படும்.

போர் நடைபெறும் உக்ரைனில் வாழும் மக்களை விட, இலங்கைவாழ் மக்கள் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமைமா கிடைக்குமா என்பது சந்தேகமே. – என்றார்.

## சைவப்புலவர் சங்க செயற்குழுக்கூட்டம்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்க தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது

பரீட்சை சம்பந்தமான விடயங்கள் பட்டமளிப்பு விழா மற்றும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் தீர்மானங்கள் தொடர்பான முக்கியமான விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து நிர்வாக செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த. குமரன் அறிவித்துள்ளார்.



நந்தவனம் பவுண்டேன் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாதனைப் பெண்கள் 2022. விருது வழங்கும் விழா நாளை (சனிக்கிழமை) காலை சென்னை விஜய் பார்க் ஹோட்டலில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த உதயன் வார இதழ் (கனடா) ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம், இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், ஆகியோர் உடன் விருது பெற்ற சாதனையாளர்களான வவுனியாவை சேர்ந்த சூரியாலினீ, மன்னாரை சேர்ந்த வெற்றிச்செல்வி சந்திரகலா, திருகோணமலையை சேர்ந்த சுஹாசினி பரசுராமன், ஆகியோருடன் நந்தவனம் பவுண்டேன் தலைவர் சந்திரசேகரன் உடன் காணப்படுகின்றார்.

## பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டது ஆகக் குறைந்தது 20 ரூபாவாகியது

*புதிய பஸ் கட்டண அதிகரிப்புக்கு அமைய, 17 ரூபாவாக காணப்பட்ட ஆகக் குறைந்த பஸ் கட்டணம், 20 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*தேசியபோக்குவரத்துஆணைக்குழுவால் நேற்று(திங்கட்கிழமை) இது தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது.*

*இலங்கையில் தற்போது ஆகக்கூடிய பஸ் கட்டணமாக 1,303 முதல் 1,498 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.*

## மறைந்த தலைவர் சிறீ சபாரத்தினத்தின் மூத்த சகோதரரின் இறுதி அஞ்சலி நிகழ்வு!

ஈழ விடுதலை போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும், தன் இறுதி மூச்சு வரை உறுதியாகத் தமிழ் இன விடுதலையை நேசித்தவரும், தமிழ்த் தேசியத்தை இறுகப்பற்றி, தன்னைத் தமிழ்த் தேசிய பற்றாளனாகவும் தமிழின உணர்வாளனாகவும் தொடர்ந்து அடையாளப்படுத்தி, வெளிப்படுத்தி நின்று, இன விடுதலையின் பெயரால் பலமுறை சிறைசென்று, சித்திரவதைகளுக்கு ஆளாகி, சிறை மீண்டவரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ரெலோவின் மறைந்த தலைவர் சிறீ சபாரத்தினத்தின் மூத்த சகோதரருமான டாக்டர் சுந்தரம்பிள்ளை கந்தசாமி (கந்தா)கடந்த 09-03-2022 அன்று உடற் சுகவீனம் காரணமாக சென்னையில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கடந்த ஞாயிற்றுக் கிழமை சென்னையில் நடைபெற்றன. மறைந்த தலைவர் சிறீ சபாரத்தினம் மற்றும் அவரது மூத்த சகோதரருமான அமரர் சு.கந்தசாமி கந்தா ஆகியோரின் இல்லம் அமைந்துள்ள இடமான யாழ்.கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகில் அஞ்சலி கூட்டம் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான கே.விந்தன் கனகரட்ணம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் மௌன வணக்கம், ஈகைச் சுடரேற்றல், திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிப்பு, திரு வுருவப் படத்துக்கு மலரஞ்சலி மற்றும் அஞ்சலி உரை களும் நடைபெற்றன.

இந்த நிகழ்வு மறைந்த தலைவர் சிறீ சபாரத்தினம் மற்றும் அவரது சகோதரர் அமரர் சு.கந்தசாமி கந்தா ஆகியோரின் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள், ஊரவர்களின் வேண்டுகோளின் பேரில் விந்தன் கனகரட்ணம், விஸ்வநாதன் விஸ்வா மற்றும் கஜேந்தினி, காந்தரூபன், இராசதுரை, நடராசா ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.

அஞ்சலி நிகழ்வில் உரைகளை வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், பிரபல சட்டத்தரணி ஏ.இராஜரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

அஞ்சலி நிகழ்வில் ரெலோவின் மூத்த போராளிகள் உட்படப் பல பொது மக்களும் கலந்துகொண்டு கண்ணீர் மல்க இறுதி அஞ்சலி செலுத்தினர்,

## கையடக்கத் தொலைபேசி நிலையத்தை திருடிய பெண் காத்தான்குடியில் கைது

காத்தான்குடியில் கையடக்க தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றை கொள்ளையிட்ட அக்கரைப்பற்று இறக்காமம் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 4 பேரை ஞாயிற்றுக்கிழமை கைது செய்ததுடன் 8 லட்சம் ரூபா பெறுமதியான 23 கையடக்கத் தொலைபேசிகளை மிட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள கையடக்கத் தொலைபேசி நிலையம் பூட்டியிருந்த நிலையில் உடைத்து அங்கிருந்த சுமர் 24 லச்சம் ரூபா பெறுமதியான 75 கையடக்க தொலைபேசிகள் திருடப்பட்டன.

இது தொடர்பாகப் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒனறையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமிந்த நயனசிறியின் ஆலோசனைக்கமைய பெரும்குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்பெக்டர் வை.விஜயராஜா தலைமையில் பொலிஸ் சாஜன் கருணாரத்தின, ஜெசிங்க, அருண் ஆகியார் அடங்கிய பொலிஸ் குழுவினர் விசாரணையில் அக்கரைப்பற்றச் சேர்ந்த ஒருவரை 12 கையடக்க தொலைபேசிகளையும் இறக்காமத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 3 பேரை 11 கையடக்க தொலைபேசிகளுடன் கைது செய்ததையடுத்து 23 கையடக்க தொலைபேசிகளை மீட்டதுடன் 4 பேரை கைது செய்துள்ளனர் எனவும் பிரதான சூத்திரதாரி தப்பி ஓடியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில்கைது செய்யப்பட்டவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசின் அழைப்பில் இலங்கை வந்தனர் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள்!

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி இலங்கைக்கு அரசின் அழைப்பை ஏற்று நேற்று (திங்கட்கிழமை) விஜயம் செய்துள்ளார்.

இதற்கமைய அவர், நிதி அமைச்சர் பஸல் ராஜபக்ஷவை நேற்று சந்தித்தமையுடன், இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து பேசவுள்ளார் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய எதிர்காலத்தில் கடன் உதவி வழங்குவதற்கான நிபந்தனைகள் அடங்கிய யோசனைத் திட்டமொன்றையும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி இதன்போது சமர்ப்பிக்கவுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். மாவட்டச் செயலகமா? அரசியல் கட்சி அலுவலகமா?

## சீற்றத்துடன் ஈ.பி.டி.பி. போராட்டம்

**யாழ்ப்பாணம், மார்ச் 15**

**யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்தால் நடைமுறைப்படுத்தப் படு கின்ற மக்கள் அபிவிருத்தி திட்டங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை, அவை ஓர் அரசியல் கட்சி சார்பான நடவடிக் கைகள் போல முன்னெடுக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்டு அந்தப் போக்குக்கு எதிர்ப் புத் தெரிவித்து ஈழமக்கள் ஜனநாயக கட்சி யினர் நேற்று திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**




போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'அரச சுற்று நிருபங்களை முறையாக நடை முறைப்படுத்து!', 'மாவட்ட செயலகம் அரசியல் கட்சி அலுவலகமா?', 'மாவட்ட செயலாளரே! அதிகாரியாகத் துணிந்து செயல்படுங்கள்!' – போன்ற கோஷங் களை எழுப்பினர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர் கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கண பதிப்பிள்ளை மகேசனிடம் மகஜர் ஒன் றையும் கையளித்தனர்.

இப்போராட்டத்தில் ஈழமக்கள் ஜனநா யக கட்சியை சார்ந்த நிர்வாக செயலாளர் களான இராமநாதன் ஐங்கரன், ஸ்ரீரங் கேஸ்வரன், சிவகுரு பாலகிருணன், வேலணை பிரதேச சபை தவிசாளர் நம சிவாயம் கருணாகரகுருமூர்த்தி, வேலணை பிரதேச சபை உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த், முன்னாள் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குண ராஜா மற்றும் அக் கட்சியின் பிர தேச சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப் பினர்கள், கட்சி சார்ந்தவர்கள், பொதுமக் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

## புதிய கொரோனாத் திரிவாக 'டெல்டாக்ரோன்' களத்தில்!

கொழும்பு, மார்ச் 15

டெல்டாக்ரோன் என்ற புதிய கொரோனா திரிவு உருவாகியிருப்பதை உலக சுகாதார அமைப்பு உறுதிசெய்துள்ளது.

அது டெல்டா, ஒமிக்ரோன் வைரஸ் திரிவு வகைகளின் கலவையாக உரு வெடுத்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் கொரோனா வைரஸ் வகை குறித்த ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் மரியா வான் கெர்கோவ் இதனை உறுதிசெய்தார்.

அந்த வகை திரிவினால் பாதிக்கப்பட்ட வர்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவி லும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், இந்த வைரஸ் வகை குறித்து கவலைப்படுவதா என்பதை இப் போது உறுதி செய்யமுடியாது என்று உலக சுகாதார அமைப்பு கூறியது.

தற்போது சில பாதிப்புகள் பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என றொய்ட் டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

அதனுடன் தொடர்புடைய சுமார் 30 சம்பவங்கள் அடையாளம் காணப்பட் டுள்ளன பிரிட்டன் சுகாதாரப் பாதுகாப்பு நிறுவனம் கூறியது.

## பூச்சிகொல்லி மருந்துடன் மூவர் வசமாக மாட்டினர்

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் தமிழகத்தில் இருந்து இலங்கைக்குக் கடத்தவிருந்த பெருந் தொகை பூச்சிகொல்லி மருந்துடன் மூவர் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு தூத்துக்குடியில் இருந்து மீன்பிடிக்கப் புறப்படும் படகு ஒன்றில் இருந்தே இவ்வாறு ஒரு தொகை பூச்சிக் கொல்லி மருந்தும், அதனைக் கடத்த முயன்றதான சந்தேகத்தில் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



இவ்வாறு கடத்தலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் மராயன் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் பெயரிலேயே மூவரும் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

### தொடரும் விமலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் விமல் வீரவன்ஸ, அமைச்சர வையில் இருந்து வெளியேற்றப்பட்டதை யடுத்து அவரின் கட்சி சகாவான ஜயந்த சமரவீர இராஜாங்க அமைச்சுப் பதவி யைத் துறந்தார்.

இந்நிலையிலேயே மற்றுமொருவர் அரசால் வழங்கப்பட்ட பதவியை நேற்றுத் துறந்துள்ளார்.

### ஜனாதிபதி நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஜனாதிபதி, நாட்டு மக்களுக்கு உரை யாற்றவுள்ளார்.

நாட்டு மக்கள் கடும் அதிருப்தியில் இருப்பதால், மக்களுக்கான சில சலுகை கள் ஜனாதிபதியின் உரையில் இடம் பெறக்கூடும் என எதிர்பார்க்கப்படு கின்றது .

### அரசுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

நாட்டில் தற்போது கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நிதி நிலைமை பற்றி எதுவும் சரியாக தெரியவருவ தில்லை. நிதி அமைச்சர் நம்பிக்கை இழந்து வருகின்றார். பொருள்களின் விலையும் அதிகரித்து வருகின்றது.

எனவே, இந்த அரசுக்கு மக்களின் எதிர்ப்பைக் காட்டும் வகையில் இன்று கொழும்பில் மாபெரும் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருவார்கள். குறிப்பாக வடக்கு, கிழக்கில் இருந்தும் கொழும்பு நோக்கி வந்து, தமது எதிர்ப்பை மக்கள் வெளிப் படுத்துவார்கள் – என்றார்.

## லண்டன் 'அறிவு' அறக்கட்டளை ஏற்பாட்டில் யாழ் பாடசாலைகளில் அற ஒழுக்க உரைகள்

### இன்று யாழ் இந்துவில்; நாளை மகாஜனாவில்



பிரித்தானியாவின் 'அறிவு' அறக்கட் டளையின் சார்பில் இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், நாளை தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரியிலும் காலை 9.30 மணி முதல் மாணவர்க ளின் உளவளர்ச்சி கருதிய சொற்பொழிவு இடம்பெற விருக்கின்றது.

'அறிவு' அறக்கட்டளை நிகழ்ச்சி ஒருங் கிணைப்பாளர் பதஞ்சலி நவேந்திரனின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திரு முருகன் மாணவர்களின் உளவளர்ச்சி கருதிய உரைகளை ஆற்றுவார்.

இன்று யாழ்.இந்துக் கல்லூரியில் 'அறம் வெல்லும்' எனும் தலைப்பில் இடம் பெறும் உரைக்கு கல்லூரி அதிபர் ஆர்.செந்தில்மாறன் தலைமை வகிப்பார்.

நாளை மகாஜனாக் கல்லூரியில் 'ஈறில் நல்லறம்' என்ற தலைப்பில் கலாந்தி திருமுருகன் அறிவுரையாற்று வார். கல்லூரியின் பிரதி அதிபர் வே.சந் திரசேகர் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வட மாகாண கல்வி, பண்பாட்ட லுவல்கள், விளையாட்டுத்துறை அமைச் சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். பிரதி அதிபர் ந.பவன் நன்றியுரையாற்றுவார்.

இரண்டு நிகழ்வுகளிலும் மாண வர்களின் கேள்விகளுக்கு கலாநிதி ஆறு. திருமுருகன் பதிலளிப்பார்.

இது தொடர்பில் அறிவு' அறக்கட்ட ளையின் ஒருங்கிணைப்பாளர் பதஞ்சலி நவேந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

2009 இல் முடிவிற்கு வந்த போரின் பின், 13 வருடங்களைக் கடந்தும், எம்மி னம் மீண்டும் எழுச்சி பெற்று பழைய நிலைக்கு போகமுடியவில்லை என்பது யதார்த்த நிலைமை.

புலம் பெயர் தமிழர்களின் தன்னல மற்ற பாரிய பொருளாதார உதவிகள், பல்வேறு தர்ம நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்ட போதும், தமிழினம் தன் முன்னைய மிடுக்கை அடைய இன்னும் தொலைதூரம் இருக்கின்றது.

நாம் தொலைத்த அறவாழ்வை மீட்டெ டுப்பதால் மட்டுமே, நாம் பழைய நிலைக் குப் போகலாம் என உணர்ந்ததால், 'அறிவு அறக்கட்டளை' (Arivu Foundation UK) என்ற ஓர் தர்ம நிர்வாகத்தை லண்ட னில் உருவாக்கி, அதன் மூலம், மாண வர்களுக்கு, அறச்சிந்தனையை விதைக் கும் நோக்கில், இலங்கையில் இருக்கும் தமிழ்ப்பாடசாலைகளில், கம்பவாரிதி ஜெயராஜ், ஆறுதிருமுருகன் போன்றோர் ஊடாக மாணவர்களுக்கு அறச்சொற் பொழிவுகள் நடத்தும் முயற்சியில் இறங்கி இருக்கிறேன்.

இதன் முதற்கட்டமே மேற்படி நிகழ்வு கள்.

இலங்கையில் இருக்கும் மற்றைய தமிழ்ப்பாடசாலைகளிலும், இந்த அறச் சொற்பொழிவுகளை நடத்த உதவி செய் யுமாறு வேண்டுகிறேன். என் முயற்சியில் வெற்றி பெறஎல்லோருடைய ஆதரவை யும் எதிர்பார்க்கிறேன். – என்றார் பதஞ் சலி நவேந்திரன்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய மக்கள் சக்தி இன்று அரசுக்கு எதிராக போராட்டம்!

அரசுக்கு எதிராக இன்று (செவ்வாய்கிழமை) பிற்பகல் ஒரு மணிக்கு போராட்டமொன்றை கொழும்பில் நடத்தவுள்ளதாக எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

பொது மக்களின் தற்போதைய பிரச்சினைகளை ஜனாதிபதிக்குத் தெரிவிப்பதிலும், அடுத்த மாதத்துக்குள் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு அரச தலைவருக்கு சவால் விடுக்கும் நோக்கில் இந்தப் போராட்டம் அமையவுள்ளது.

அதேவேளை இலங்கையின் எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கு நிபுணர்கள் குழுவை அமைக்குமாறு அரசாங்கத்திடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை ஒன்றை முன்வைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தோனேசிய நிலநடுக்கத்தால் இலங்கைக்குப் பாதிப்பு இல்லை!

இந்தோனேசியாவின் சுமத்திரா தீவில் உணரப்பட்ட நிலநடுக்கத்தால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுனாமி எச்சரிக்கை மையத்தால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக அந்த மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் நேற்று (திங்கட்கிழமை) காலை 6.39 மணியளவில் 6.8ரிக்டர்அளவிலானநிலநடுக்கம்உணரப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதில் சிக்கல் நிலை என தகவல்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டில் நிலவி வரும் அமெரிக்க டொலர் தட்டுப்பாட்டால் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதற்கு முடியாத நிலைமை உருவாகியுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவிருந்த சாதாரண தரப் பரீட்சையை கொவிட் காரணமாக மே மாதம் 23 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் இந்தப் பரீட்சையில் தோற்ற உள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் போதும் பரீட்சைகள் திணைக்களத்திடம் போதியளவு கடதாசிகள் கையிருப்பில் இருக்கவில்லை எனவும், அரச அச்சக கூட்டுத்தாபனத்திடம் கடதாசி பெற்றுக் கொண்டே பரீட்சை வினாத்தாள்கள் அச்சிடப்பட்டன எனப் பரீட்சை திணைக்கள அதிகாரியொருவர் தெற்கு ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடதாசிகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது எனவும் அவற்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொள்கலன் போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிப்பு!

*கொள்கலன் போக்குவரத்துக்கான கட்டணத்தை அதிகரிக்க இலங்கை கொள்கலன் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தள்ளது.*

*அதனடிப்படையில் நேற்று முதல் அமுலாகும் வகையில் கொள்கலன் போக்குவரத்து கட்டணம் 60 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.*

# கிரிக்கெட் பார்க்க சென்ற சிறுவன் சடலமாக மீட்பு!



பொகவந்தலாவ செவ்வகத்தை தோட்டத்தில் உள்ள விவசாயம் செய்யும் மரக்கறி தோட்டத்தில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து பாடசாலை மாணவன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியவில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ செல்வகந்தை தோட்டத்தைச் சேர்ந்த உயிரிழந்த மாணவன் பொகவந்தலாவ சென்மேரீஸ் மத்திய கல்லூரியில் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்று போட்டியை கண்டு கழித்துவிட்டு வீடு திரும் புள்ளார்.

இதனையடுத்து, சிறுவனை நீண்ட நேரம் காணவில்லை என உறவினர்களைத் தேடிய நிலையில் மரக்கறித் தோட்டத்தில் உள்ள கிணறு ஒன்றில் சடலமாக கிடப்பதை சிறுவனின் உறவினர்கள் கண்டுள்ளனர்.

பின்னர் சிறுவனை மீட்டு பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட சிறுவனின் உதட்டுப் பகுதியில் காயங்கள் காணப்பட்டதோடு இந்த சிறுவன் பொகவந்தலாவ சென்மேரீஸ் மத்திய கல்லூரியில் உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்வி கற்று வருகிறார்.

சடலமாக மீட்கப்பட்ட சிறுவன் பொகவந்தலாவ செல்வகந்தை தோட்டத்தைச் சேர்ந்த 18 வயதுடைய பாரதிதர்ஷன் என அடையாளம் காணப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சடலம் பொகவந்தலாவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு சட்டவைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# தபால் தொலைத்தொடர்பாளர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட 52 ஆவது மாநாடு

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பாளர் சங்கத்தின் 52 ஆவது மாநாடு மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பாளர் சங்கத்தின் தலைவர் என்.இதயக்கமலன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பாளர் சங்கத்தின் தலைவர் சாந்தகுமார மீகம, உதவி செயலாளர் திலகரட்ன யட்டவர, நிர்வாக குழு உறுப்பினர் சோபா ரட்ன, தபால் சேவைகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பிரதி பணிப்பாளர் ஜெ.திருச்செல்வம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கடந்த ஆண்டுக்கான கூட்டத்தின் கூட்டறிக்கை மற்றும் கணக்கறிக்கை வாசிக்கப்பட்டு சங்க உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமானது. சங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் தபால் மற்றும் தொலைத்தொடர்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இங்கு முன்வைக்கப்பட்டன.

அத்துடன் இதன்போது 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவுக்கான தேர்தலும் நடத்தப்பட்டு உறுப்பினர்கள் வாக்களிக்கும் நிகழ்வும் நடைபெற்றதைத் தொடர்ந்து புதிய ஆண்டுக்கான நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டது.

இதனடிப்படையில் புதிய தலைவராக மீண்டும் முன்னாள் தலைவர் என்.இதயக்கமலன் தெரிவுசெய்யப்பட்டதுடன், புதிய செயலாளராக ஜி.ரஞ்சித் தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன் பத்துபேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் வாக்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டதுடன், பொருளாளர் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்.

அதனை தொடர்ந்து புதிய ஆண்டுக்கான மாநாடு தொடர்ந்து நடைபெற்றதுடன் பால் மற்றும் தொலைத்தொடர்பாளர் சங்கத்தால் பல கோரிக்கைகள் அரசிடம் முன்வைக்கப்பட்டன.

# சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் நாட்டுக்கு வருகை!



சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் ஃபைபஸல் பின் ஃபர்ஹான் நாட்டை வந்தடைந்துள்ளார்.

அவர் ஒருநாள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று(திங்கட்கிழமை) அதிகாலை 1.20 மணியளவில் நாட்டை வந்தடைந்தார்.

அவருடன் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் 18 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.